Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, OCTOBER 23 2023

திங்கட்கிழமை ஒக்டோபர் 23, 2023 | ஒளி: 09 கதிர் 111 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE



## பெப்ரவரி முதல் தினசரி சூத்திரம்

2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இலங்கையில் எரிபொருளுக்கான தினசரி விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க தெரிவித்துள்ளார்.

புதிய முறையின் பிரகாரம் எரிபொருட்களின் விலை நாளாந்த அடிப்படையில் தீர்மானிக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

கொவிட் தொற்றின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் காரணமாக எரிபொருள் விலைகள் தொடர்பில் தீர்மானிக்க மாதாந்த விலை சூத்திரமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

கடந்த இரண்டு வருடங்களாக எரிபொருள் விலை சூத்திரத்தின் பிரகாரம்தான் விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. என்றாலும், எரிபொருள் விலை சூத்திரம் அரசாங்கத்தால் நீக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

### எம்.பிக்கள் ஒழுங்காக நடந்து கொள்ளாவிடின் சிக்கல்

## வரைவு வருகிறது



பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் ஒழுங்காக நடந்து கொள்ளாவிடின் அதனைக் கையாள்வதற்கான அதிகாரம் வழங்கும் வரைவு அமைச்சரவையின் ஒப்புதலுக்காகத் திங்கட்கிழமை (23) சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய இந்த வரைவைத் தயாரித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். பாராளுமன்றத்தில் கடந்த வாரம் இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரிவித்த ஜனாதிபதி, பாராளுமன்றத்தில் மரியாதை, ஒழுக்கம் என்ற ஒன்று இல்லையா என மக்கள் கேள்வி எழுப்புவதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## கைவிடப்பட்டுள்ள தேர்தல்களை நடத்தவும்

அரசாங்கத்தின் உத்தேச தேர்தல் சீர்திருத்தங்களை வரவேற்றுள்ள முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, முன்னர் கைவிடப்பட்டுள்ள தேர்தல்களை நடத்தவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களில் பாரிய மாற்றங்களை மேற்கொள்ள 9 பேர் கொண்ட குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளமை குறித்து கருத்து தெரிவித்த மகிந்த தேசப்பிரிய, தனக்கு வழங்கப்பட்டுள்ள பணியை ஆணைக்குழு ஆறுமாதங்களில் பூர்த்தி செய்வது மிகவும் கடினமாகும்.பல மணித்தியாலங்கள் பல நாட்கள் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்களில் ஈடுபடவேண்டியிருக்கும் ஒருவருட காலத்திற்குக் கூட இது நீடிக்கலாம் என தெரிவித்துள்ளார். சீர்திருத்தங்கள் வரவேற்கத்தக்கவை அவை இந்த காலத்தின் தேவையாகும் எனினும், இவற்றுக்கு முன்னர், காணாமல்போன மாகாண சபை தேர்தலும் புதைக்கப்பட்ட உள்ளூராட்சி சபை தேர்தலும் எங்களுக்கு அவசியம் என்றார்.



## மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல்

மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என தெரிவித்துள்ள மின் பாவனையாளர்கள் சங்கத்தின் செயலாளர் சஞ்ஜீவ தம்மிக, மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வழங்கிய அனுமதி சட்டவிரோதமானது என சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

## உணர்வுபூர்வமான பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முடியும்

### சீனாவில் அமைச்சர் டக்ளஸ் எடுத்துரைப்பு

காலாவதியான பூகோள அரசியல் தந்திரங்களைப் புறந்தள்ளி விட்டு முரண்பாடுகளற்ற பேச்சுவார்த்தைகள் ஊடாகவே பிரச்சினைகளுக்கான தீர்வினை காணவேண்டும் என்ற சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் தெரிவித்துள்ள கருத்துக்கள் தன்னை கவர்ந்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



தொடர்ச்சி P2



## லியோ பார்க்கச் சென்றிருந்தோர் மீது வாள் வெட்டு: ஐவருக்கு காயம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்ம

மட்டக்களப்பு - செங்கலடி திரையரங்கில் வெள்ளிக்கிழமை (20) வாள் வெட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல்

அடுத்த ஆண்டு (2024) ஜனாதிபதித் தேர்தலையும், அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தலையும், 2025ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலையும் நடத்துவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சனிக்கிழமை (21) அறிவித்துள்ளார் .“அரசியலமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும், அதனைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டின் முற்பகுதியில் பாராளுமன்றத் தேர்தலும் மாகாணசபைத் தேர்தலும் நடத்தப்படும்” என்றார்.

தொடர்ச்சி P2





## மீரியபெத்தயில் மீண்டும் மண்சரிவு

ஹல்துமுல்ல- கொஸ்லந்த, மீரியபெத்த ஆகிய பழைய மண்சரிவுப் பகுதியின் இரு பக்கங்களும் ஞாயிற்றுக்கிழமை (22) முதல் மீண்டும் சரிய ஆரம்பித்துள்ளதாக பதுளை அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் ஈ.எம்.எல். உதயகுமார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 5,000 அதிபர்களுக்கு விரைவில் நியமனக் கடிதங்கள் கிடைக்கும்

சுமார் 5000 அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் விரைவில் கையளிக்கப்படும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் தெரிவித்துள்ளார்.

அதன்படி, அனைத்து தரங்களுக்குமான அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் இவ்வாறு கையளிக்கப்படவுள்ளன.

தொடர்ச்சி P2

## நாட்டை கட்டியெழுப்ப ஆக்கப்பூர்வமான புதிய தீர்வுகளே தேவை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே அனைவரின் நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் நாடு வங்குரோத்து நிலையில் உள்ள போது ஆக்கப்பூர்வமான மற்றும் புதிய தீர்வுகள் மூலம் ஒரு வெளிச்சக் கோட்டை உருவாக்க முடியும் என்றும்,நாடு வீழ்ச்சியடைந்துள்ள போதும் அதிலிருந்து சரியாக மீள எழு வேண்டும் என்றும் இதன் மூலம் புதிய பார்வையில் தேசத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## நாளை ஆர்ப்பாட்டம்



கல்வி அமைச்சுக்கு முன்பாக செவ்வாய்க்கிழமை (24) ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு ஆசிரிய, அதிபர் தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த சபை தீர்மானித்துள்ளது என அதன் பிரதி இணைப்பாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பாடசாலை செயற்பாடுகளுக்கு போதுமான நிதியை வழங்குதல் உள்ளிட்ட சில காரணங்களை முன்னிறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

## 200 கிலோ கிராம் ஹெரோய்ன் சிக்கியது




4000 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான பெறுமதியான 200 கிலோ கிராமுக்கும் அதிகமான ஹெரோய்னுடன் போதைப்பொருளுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் பல நாள் மீன்பிடி படகும் கைப்பற்றப்பட்டுள்ளது. தெய்வேந்திர முனையில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## “கூட்டினால் கூட்டுவோம்”



எரிபொருள், எரிவாயு அல்லது மின்சாரக் கட்டணங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டால், பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை அதிகரிக்க நேரிடும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட மின் கட்டண திருத்தத்தின் காரணமாக பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை அதிகரிக்கவில்லை. ஆனால் அதிக செலவீனங்களால் தற்போது பேக்கரி தொழில் நலிவடைந்துள்ளதாகவும் அதன் தலைவர்.

தொடர்ச்சி P2

## கட்டுப்பணத்தை அதிகரிக்க தீர்மானம்

ஜனாதிபதி தேர்தலுக்காகப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கட்டுப்பணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது

அதன்படி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றில் இருந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருக்கு 50 ஆயிரம் ரூபாய் என்ற வைப்புத் தொகையை 26 இலட்சம் ரூபாயாக அதிகரிப்பதற்கான யோசனையொன்று முன்மொழியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

### எம்.பிக்கள் ஒழுங்காக நடந்து கொள்ளாவிடின் சிக்கல்

# வரைவு வருகிறது




எனவே, பாராளுமன்றத்தின் ஒழுக்கம் மற்றும் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில், இங்கிலாந்தின் பாராளுமன்ற நிலைமைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி இந்த வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டிடத் தொகுதியின் கீழ் தளத்தில் உள்ள நூலகத்திற்கு அருகில் பாராளுமன்ற உறுப்பினர்களின் இரு குழுக்களுக்கிடையில் வெள்ளிக்கிழமை (20) கைகலப்பு ஏற்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் அனுராதபுரம் மாவட்ட சபை உறுப்பினர் ரோஹன பண்டார ஆகியோருக்கு இடையில் சில விடயங்கள் தொடர்பில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அப்போது கட்சியின் கேகாலை மாவட்ட உறுப்பினர் சுஜித் சஞ்சய் பெரேரா தனது கையடக்கத் தொலைபேசியில் சம்பவத்தை வீடியோ எடுத்துள்ளார்.

அப்போது கமகேவுக்கும் சுஜித் சஞ்சய் பெரேராவுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த சம்பவத்தை அடுத்து பாராளுமன்றம் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன், மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக, குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பெப்ரவரி முதல் தினசரி சூத்திரம்

ஆனால், தற்போது இரஸ்ரேல் - பலஸ்தீனப் போர், உக்ரைன் - ரஷ்ய போர் உட்பட உலகலாளிவிய ரீதியில் பல்வேறு பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட ஆரம்பித்துள்ளன.

இதனால் எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகளில் தினமும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் எரிபொருளுக்கு தினசரி விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தியாவில் இந்த நடைமுறைதான் பின்பற்றப்படுகிறது. அதனை ஒத்ததாகவே இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும் விலை சூத்திர முறையும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

# மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல்



வருடமொன்றுக்கு மூன்று தடவைகள் மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை சட்டத்தில் இடமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை முன்வைத்த 04 காரணங்களும் பொய்யானவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மின் கட்டணத்தை அதிகரிக்க பொது பயன்பாடுகள் ஆணைக்குழு வெள்ளிக்கிழமை (20) முதல் அனுமதியளித்துள்ளது.

இதற்கமைய, 18 சதவீதத்தில் இருந்து 20 சதவீதம் வரையான மின் கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல்

கொழும்பு, சுகததாச உள்ளக அரங்கில், சனிக்கிழமை (21) நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சியின் அரசியலமைப்பிலும் கடுமையான மாற்றங்களை ஜனாதிபதி அறிவித்தார். இந்த மாற்றங்களின் கீழ், செயற்குழுவை விட செயற்குழு அதிக அதிகாரங்களைக் கொண்டிருக்கும். அதன்படி செயற்குழுவின் முதன்மை அதிகாரங்கள் செயற்குழுவிடம் ஒப்படைக்கப்படும் என்றார்.

டிஜிட்டல் கிளைகளை அமைப்பதற்கு கட்சி அரசியலமைப்பில் திருத்தம் செய்யும் என்றும், இறுதியில் மாவட்டக் கிளைகளுடன் ஒருங்கிணைக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார். ஜனவரி முதலாம் திகதிக்கு பின்னர் இந்த மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.



# மீரியபெத்தவில் மீண்டும் மண்சரிவு

இரண்டு வரிசை வீடுகளின் (லயன் குடியிருப்புகளின்) மேல் பகுதி இப்படி சறுக்கிக் கொண்டிருக்கிறது. மலை மெதுவாக சரிந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மண்சரிவினால் சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த இரண்டு வரிசை வீடுகளிலும் வசிக்கும் முப்பத்து மூன்று குடும்பங்களை பாதுகாப்பு நடவடிக்கையாக வெளியேற்றி பாதுகாப்பான மையத்தில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் திருமதி பிரியங்கனி தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட பாரிய மண்சரிவுகளில் ஒன்றாக அண்மையில் அறிவிக்கப்பட்ட கொஸ்லந்த மீரியபெத்த பழைய மண்சரிவின் இருபுறங்களிலுமே மண் சரிய ஆரம்பித்துள்ளது,

இந்த இடத்தில், இரண்டு வரிசை வீடுகள் (லயன் குடியிருப்புகள்) , பல பள்ளி கட்டடங்கள் மற்றும் குழந்தை பராமரிப்பு மையம் உள்ளன.

# உணர்வுபூர்வமான பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முடியும்

மேலும், உணர்வுபூர்வமான பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற சீன ஜனாதிபதியின் கருத்தினை நிரூபிக்கும் வகையில் தன்னுடைய அரசியல் பயணம் அமைந்துள்ளதாகவும், குறித்த நம்பிக்கையுடனேயே ஜனநாயக நீரோட்டதில் இணைந்து கொண்டு தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராகவும் தற்போதைய அரசாங்கத்தில் சிரேஸ்ட அமைச்சர்களுள் ஒருவராகவும் பணியாற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

சீனாவில் இடம்பெற்ற கடலசார் ஒத்துழைப்பிற்கான கருப்பொருள் எனும் தொணிப் பொருளில் சீனாவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பெல்ட் அன் றோட் எனப்படும் சீனாவினால் உருவாக்கப்பட்டு வருகின்ற சர்வதேச தொடர்பாடல்

முயற்சியின் ஒரு பகுதியாக இடம்பெற்ற குறித்த மூன்றாவது சர்வதேசக் கலந்துரையாடலில் இலங்கையின் பிரதிநிதியாக கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் உரையற்றுகையில், "ஆயுதப் போராளியாக ஒருகாலத்தில் செயற்பட்ட நான், பேச்சுவார்த்தைகள் மூலமே எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என்பததை புரிந்து கொண்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டு செய்றபட்டு வருகின்றேன்" என்று தெரிவித்துள்ளார்.



குறித்த சர்வதேச கலந்துரையாடலில் கலந்து கொண்டு ஆரம்ப உரையாற்றிய சீன ஜனாதிபதி சீ ஜின்பிங், பெல்ட் அண்ட் ரோட் முன்முயற்சியைப் முன்பெடுப்பதில் காலாவதியான புவிசார் அரசியல் சூழ்ச்சியை சீனா பின்பற்றாது எனவும், அனைத்து தரப்பினருக்கும் வெற்றியளிக்கக் கூடிய ஒரு புதிய வகை சர்வதேச உறவுகளை வளர்க்க வேண்டும் என்பதுடன், மோதலின்றி நட்பு ரீதியான பேச்சுவார்த்தைகள் மூலமே உண்ர்வுபூர்வமான பிரச்சினைகளை தீர்ககவும், நீதியின் அடிப்படையிலான மத்தியஸ்தத்தை ஊக்குவிக்கவும் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தமையையே கடற்றொழில் அமைச்சரினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஆயுதப் போராடத்தின் ஊடாகவே தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் பாலஸ்தீன விடுதலைப் போராட்ட அமைப்புக்களிடம் ஆயுதப் பயிற்சியை பெற்றக்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தொடர்ச்சியாக 15 ஆண்டுகள் ஆயுதப் போராட்ட அமைப்பின் தலைவர்களுள் ஒருவராக செயற்றபட்டிருந்த நிலையில், ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# லியோ பார்க்கச் சென்றிருந்தோர் மீது வாள் வெட்டு: ஐவருக்கு காயம்



விஜய் நடித்து வெளியான லியோ படம் பார்க்கச் சென்ற குழுக்களுக்கிடையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறி அது வாள் வெட்டில் முடிந்துள்ளது.

இந்த சம்பவத்தில் 5 பேர் காயமடைந்துள்ளனர். இதில், 4 பேர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், ஒருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நாளை ஆர்ப்பாட்டம்



30 தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# 5,000 அதிபர்களுக்கு விரைவில்கி யமனக் கடிதங்கள் கிடைக்கும்

இதேவேளை, எதிர்வரும் வரவு- செலவுத் திட்டத்தில் ஆசிரியர்களின் சம்பளமும் அதிகரிக்கப்படும் என நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

"மூன்று தரங்களிலும் சுமார் 5,000 அதிபர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர். அவர்களின் நியமனக் கடிதங்களை எதிர்வரும் மாதம் 4ஆம் திகதி வழங்க நாங்கள் தயாராக உள்ளோம் என்றார்.

மேலும், இம்முறை வரவு- செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு இருக்கும் என நம்புகிறேன்." என தெரிவித்துள்ளார்.

# "கூட்டினால் கூட்டுவோம்"

"இந்தத் தொழிலுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களின் விலையும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. எரிவாயு விலை அதிகரித்துள்ளது. எரிபொருளின் விலை அதிகரித்துள்ளது. மின் கட்டணம் அதிகரித்துள்ளது. மூன்றாவது முறையாக மின் கட்டணமும் அதிகரித்துள்ளது. ஆனால் நாங்கள் எந்த அதிகரிப்பையும் செய்யவில்லை.

மின்சாரம் அதிகரிக்கப்பட்டாலும், அதிகரிப்பு எதுவும் செய்ய மாட்டோம் என தீர்மானித்தோம். ஆனால், இனிமேல் எரிவாயு, டீசல், மின்கட்டணம் அதிகரித்தால் கண்டிப்பாக விலையை உயர்த்த வேண்டியிருக்கும்" என்று அரசுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கின்றோம் என்றார்.



# புதிய தீர்வுகளே தேவை

75 வருட கால ஜனநாயக வரலாறு குறித்து பேசப்படும் காலகட்டத்தில் எதிர்க்கட்சி என்ற வகையில்,இலங்கையின் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளுக்கு இயன்றவரை பெறுமானம் சேர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும்,பிரபஞ்சம் மற்றும் மூச்சு திட்டங்களின் கீழ் பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் முறையே கல்வித் துறை மற்றும் சுகாதாரத் துறைக்கு பெறுமதியான உபகரணங்களை வழங்கும்போது மகிழ்ச்சியையும் பெருமையையும் உணர்வதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

நாடு ஒரு தீவாக இருந்தாலும், இம்மனநிலையுடன் முன்னேற முடியாது என்றும்,புதிய தொழிநுட்ப நுட்பங்களை கற்று புதிய தொழில்நுட்பத்தோடு பயணிக்க வேண்டும் என்றும்,உலக நாடுகளுடன் போட்டியிடுவதற்கு நாடு ஸ்மார்ட் நாடாக மாற வேண்டும் என்றும்,இதன் முன்னேற்றங்களைக் கொண்டு உலக நாடுகளுடன் போட்டிபோட தயாராக வேண்டும் என்றும் தெரிவித்தார்.

"பிரபஞ்சம்" வேலைத்திட்டத்தின் கீழ் 36 ஆவது கட்டமாக பத்தரமுல்லை ஜய ஸ்ரீ சுபூதி தேசிய பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை நன்கொடையாக வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (21) இடம்பெற்றது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

பெரிய பெரிய உணவகங்கில் அவ்வப்போது டிஜிட்டல் புரட்சி குறித்து மாநாடுகள் வைத்து கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டாலும், இது நடைமுறையில் செயல்படுத்தப்படவில்லை என்றும்,பாடசாலை மாணவர்களை டிஜிட்டல் உலகிற்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்தை மனதில் கொண்டு பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்பத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம் நிகழ்வில் இணைந்திருக்கும் பெற்றோர்களின் முகத்தைப் பார்க்கும்போது மிகுந்த அழுத்தத்தில் இருப்பதாகத் தெரிகிறது என்றும், மக்கள் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்கின்றனர் என்றும், மூன்றாவது தடவையாகவும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், இது சட்டவிரோதமான செயல் என்றும், இதற்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு பொறுப்புக் கூற வேண்டும் என்றும், இதற்கு எரிசக்தி அமைச்சரே பொறுப்பேற்க வேண்டும் என்றும், மக்களின் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கும்போது நாட்டின் முதலாளித்துவ நட்புவட்டார ஒரு பிரிவினருக்கு நிவாரணம் கிடைத்து வருவதாகவும் தெரிவித்தார்.

உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதியங்களில் அரசாங்கம் கை வைத்துள்ளதாகவும், நாட்டின் பெரும் செல்வந்தர்களுக்கு வரி விதிக்கப்படவில்லை என்றும், மின்சாரக் கட்டணத்தை மும்மடங்காக அதிகரித்த மாநாடு, வறுமையை அதிகரித்த மாநாடு, சிறிய, நடுத்தர மக்களின் ஜீவனோபாயத்தை அழித்த மாநாடு ஒன்று இன்று நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேர்தலின் போது ஏனையவர்கள் பல்வேறு வாக்குறுதிகள்,அறிக்கைகள் மற்றும் கொள்கைகளை வழங்கினாலும், தேர்தலுக்குப் பிறகு அவை நிறைவேற்றப்படுவதில்லை என்றும்,மற்றவர்களிடமிருந்து தாம் வேறுபடுவது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு முன்பு நடைமுறையில் செயல்படுத்துவதனால் தான் என்றும்,எந்தவொரு வாக்குறுதிகளும் வழங்காது மக்களுக்கு மனப்பூர்வமாக ஏதாவது செய்வதன் அடிப்படையிலேயே கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக இந்த கட்சி பல பணிகளை செய்துள்ளதாகவும்,இது பொது மக்கள் சேவகனின் கடமைகளில் ஒன்றாகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# 200 கிலோ கிராம் ஹெரோய்ன் சிக்கியது

இலங்கை கடற்படையின் புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகமும் இணைந்து மேற்கொண்ட ஆழ்கடல் நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட பல நாள் மீன்பிடிக் கப்பல் மீன்பிடி துறைமுகத்திற்கு ஞாயிற்றுக்கிழமை (22) கொண்டுவரப்பட்டது. படகில் இரகசியமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 200 கிலோ கிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றபபட்டுள்ளது என்றும் கடற்படை அறிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

# கட்டுப்பணத்தை அதிகரிக்க தீர்மானம்

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுயேட்சை வேட்பாளருக்கான வைப்புத் தொகையை 75 ஆயிரம் ரூபாயிலிருந்து 31 இலட்சம் ரூபாயாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி வேட்பாளர் வைப்புச் செய்யக் கூடிய தொகையில் 25 இலட்சம் ரூபாயை திரும்பப் பெறக்கூடிய தொகையாகவும், எஞ்சிய ஒரு லட்சம் ரூபாயை திருப்பிச் செலுத்த முடியாத வைப்புத் தொகையாகவும் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சுயேச்சை வேட்பாளரின் வைப்புத் தொகையில், 30 இலட்சத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யானை உயிரிழப்பு



■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - சாலியவெவ பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நீலபொம்ப கிராமத்தின் வீடு ஒன்றுக்கு அருகாமையில் உள்ள தனியார் காணியொன்றில் யானையொன்று ஞாயிற்றுக்கிழமை (22) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இரண்டு தந்தங்களைக் கொண்ட யானையே உயிரிழந்துள்ளதாக கருவலகஸ்வெவ வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்துள்ள யானையின் உயரம் சுமார் 8 முதல் 9 அடி எனவும் யானையின் தந்தங்கள் இரண்டும் 2 அடி நீளமானவை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

உடற்கூறு பரிசோதனையின் பின்னரே யானையின் மரணத்திற்கான காரணத்தை அறிய முடியும் எனவும் கருலகஸ்வெவ வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர்.

குறித்த கொம்பு யானையின் பிரேதப் பரிசோதனையை வடமேல் மாகாண வனஜீவராசித் திணைக்கள கால்நடை வைத்தியர் இசுரு ஹேவாகொட்டுகே மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த யானை எவ்வாறு உயிரிழந்தது என்பது தொடர்பான மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெவ வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகளுடன் சாலியவெவ பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

# கிளிநொச்சியில் தங்கத்தை தேடி வேட்டை



■ யது பாஸ்கரன்

கிளிநொச்சி திருநகர் பகுதியில் விடுதலைப் புலிகளால் தங்கம் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகத்தில் அகழ்வு பணிகள் ஞாயிற்றுக்கிழமை (22) முன்னெடுக்கப்பட்டன.


கிளிநொச்சி - திருநகர் பகுதியில் விடுதலைப்புலிகளால் தங்கம் புதைக்கப்பட்டிருக்கலாமென்ற தகவலுக்கு அமைய, விசேட அதிரடிப்படையினர் பொலிஸா தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கிராம அலுவலர் முன்னிலையில், குறித்த அகழ்வு பணி ஞாயிற்றுக்கிழமை (22) காலை 9 மணிமுதல் முன்னெடுக்கப்பட்ட போதிலும், எவையும் சிக்கவில்லை.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீலவான் நீதிமன்ற நீதிவான் ஜெ. சுபராஜினி முன்னிலையில் அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டிருந்த போதும், எந்தவித பொருட்களும் இல்லாத நிலையில் அகழ்வு நடவடிக்கை நிறுத்தப்பட்டு மீளவும் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காதலனுக்காக பொலிஸாரின் கை விரல்களை கடித்த காதலி

குடிபோதையில் வந்த 25 மற்றும் 27 வயதுடைய இரு இளைஞர்களை அம்பலாங்கொடை பொலிஸார் சனிக்கிழமை (20) இரவு கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த இளைஞர்களை மீட்பதற்காக இளைஞன் ஒருவரின் காதலியான யுவதி ஒருவர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று ஆக்ரோஷமாக நடந்து



கொண்டுள்ளார்.

அப்பெண்ணை பொலிஸார் கைது செய்ய முற்பட்ட போது, பெண் பொலிஸ் உத்தியோகத்தர் விரலைக் கடித்துள்ளதுடன், மற்றுமொரு பெண் பொலிஸ் அதிகாரியின் விரலையும் கடித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் பலப்பிட்டிய நீதவான் முன்னிலையில் சனிக்கிழமை (21) முன்னிறுத்திய போது எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# ரயிலில் மோதி பெண் ஒருவர் பலி

■ ராமு தனராஜா

ஹாலி எல - பதுளை புகையிரத பாதையில் பெண் ஒருவர் ரயிலில் மோதி உயிரிழந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்றுள்ளது.

பதுளை - ஹப்புவத்தை பகுதியைச் சேர்ந்த 80 வயதுடைய வயோதிப பெண் ஒருவர், கண்டியில் இருந்து பதுளை நோக்கி கொண்டிருந்த சரக்கு ரயிலில் மோதுண்டு பலத்த காயமடைந்த நிலையில், பதுளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணின் சடலம் பதுளை பொது வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹலி எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# துப்பாக்கிச்சூட்டில் மூவர் காயம்



அஹுங்கல்ல பிரதேசத்தில் சனிக்கிழமை (21) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூன்று பேர் கொண்ட குடும்பம் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, அஹுங்கல்ல, உரகஹாவில் உள்ள பாடசாலைக்கு அருகில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, மூவரும் பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## குடிநீர் முகாமைத்துவத்துக்காக

# தனி செயலகம்

### ஐ.நாவிடம் ஜீவன் விளக்கம்

நிலைபேண்தகு அபிவிருத்தி திட்டத்தில் உள்ள 'பாதுகாப்பான மற்றும் தூய்மையான குடிநீர்' என்ற இலக்கை 2030ஆம் ஆண்டுக்குள் அடைவதே தமது எதிர்பார்ப்பாக இருப்பதாகவும், இதற்கான உட்கட்டமைப்பு, நிதி உள்ளிட்ட உதவிகளை ஐ.நாவின் குடிநீருக்கான ஸ்தாபனம் வழங்க வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுவிஸ் தலைநகர் ஜெனிவாவுக்கு பயணம் மேற்கொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், ஐ.நாவின் குடிநீருக்கான ஸ்தாபனத்தின் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது, குடிநீர் வழங்குதலில் ஏற்படவுள்ள கொள்கை ரீதியிலான மாற்றம், ஒன்றிணைக்கப்பட்ட குடிநீர் முகாமைத்துவ கொள்கை மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான செயல் திட்டம் பற்றியும் விளக்கம் அளித்துள்ளார்.

குறிப்பாக ஒன்றிணைக்கப்பட்ட குடிநீர் முகாமைத்துவ கொள்கை ஊடாக, குடிநீர் தொடர்பான அனைத்து ஸ்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களை ஒன்றிணைத்து பிரதம அமைச்சரின்கீழ் தனியான செயலாமாக நீர்வழங்கல் கொண்டுவரப்படும் எனவும் அதற்கான ஏற்பாடுகள், அந்த செயலகம் எவ்வாறு செயற்படும் என்பது சம்பந்தமாகவும் அமைச்சர் ஜீவன் அதிகாரிகளுக்கு எடுத்துரைத்துள்ளார்.

அதேவேளை, நிலைபேண்தகு அபிவிருத்தி திட்டத்துக்குள் பாதுகாப்பு மற்றும் தூய்மையான குடிநீர் என்பதும் பிரதான விடயமாக உள்ளது. 2030ஆம் ஆண்டளவில் இந்த இலக்கை அடைவதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட எதிர்பாராத சூழ்நிலைகளால் குறிப்பிட்ட காலத்துக்குள் இலக்கை அடைவது சவாலாக உள்ளது.

எனவே, உரிய காலப்பகுதிக்குள் இலக்கை அடைவதற்கான உட்கட்டமைப்பு, நிதி உள்ளிட்ட வசதிகளை ஐ.நாவின் குடிநீருக்கான திட்டத்திடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்." எனவும் அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இச்சந்திப்பில் ஐ.நாவின் குடிநீருக்கான ஸ்தாபனத்தின் உப தலைவர் யோகானஸ் கல்மன், உலகளாவிய கண்காணிப்பு பணிப்பாளர் வில் ரைட்எட், தலைமை நிபுணத்துவ அதிகாரி கலாஸ் மொல்டிவ்ஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், பெருந்தோட்ட மனிதவள நிறுவனத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, அமைச்சின் ஆலோசகர் ஹரித்த விக்ரமசிங்க ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.



# சடலம் மீட்பு



■ அஸ்ஹர் இப்றாஹிம்

பொத்துவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொத்திக்களப்பிலிருந்து ஞாயிற்றுக்கிழமை (22) சடலமொன்று கரை ஒதுங்கியுள்ளது

பொத்துவில் வை.எம் வீதியைச் சேர்ந்த 70 வயது மதிக்கத்தக்க முகம்மது இஸ்மாயில் உதுமாலெப்பை என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாத்திரைக்கு சென்ற சிறுவன் பலி



நுவர வாவியின் மதகு கால்வாய்க்குள் தவறி விழுந்து ஆறு வயது சிறுவன் உயிரிழந்த சம்பவமொன்று வெள்ளிக்கிழமை (20) இடம்பெற்றுள்ளது.

புனித யாத்திரைக்காகப் பெற்றோருடன் அனுராதபுரத்திற்குச் சென்று நுவர வாவியில் குளித்தபோதே தவறி விழுந்துள்ளார்.

சிறுவனை மீட்டு அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக அநுராதபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கேகாலையில் இருந்து அனுராதபுரத்திற்குக் குடும்பத்துடன் சென்றிருந்தனர். எனினும், விபத்து ஏற்படுமென எச்சரிக்கை பலகை விடுக்கப்பட்டுள்ள இடத்திலேயே குளித்துள்ளனர் என பொலிஸார் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.


# கம்பஹா மாநகர சபை

**2024 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து 2024 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும், வாகனங்கள் நிறுத்தும் இடம், பொது மலசலக்கூடம், இறைச்சிக்கடை மற்றும் யக்கலை வாராந்த சந்தை ஆகியவற்றுக்கான விலைமனுக்கோரல்.**

2024 ஜனவரி மாதம் 01ஆம் திகதியில் இருந்து 2024 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் வாகனங்கள் நிறுத்தும் இடம், பொது மலசலக்கூடம், இறைச்சிக்கடை மற்றும் யக்கலை வாராந்த சந்தை ஆகியவற்றுக்காக வர்த்தக உரிமையை குத்தகைக்கு விடுப்பதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு விண்ணப்பம் அதற்கான விலைமனு வைப்பு பணம் மற்றும் விலைமனு விண்ணப்பக் கட்டணம் ஆகியவற்றை செலுத்தி 2023.11.06 ஆம் திகதி வரை வேலை நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல 3.00 மணி வரை விலைமனு விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

சமர்ப்பிக்கப்பட்டும் விலைமனு விண்ணப்பப் படிவங்கள் தனித்தனி உறைகளில் இட்டு அசல் மற்றும் நகல் என சீல் வைக்கப்பட்டு இரண்டு உறைகளும் ஒரு உறையில் இட்டு அதன் பிறகு அதுவும் சீல் வைக்கப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சபை வளாக விலைமனுக்கோரல் - 2024" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டு 2023.11.07 ஆம் திகதி அன்று பிற்பகல் 02.00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு மாநகர ஆணையாளர், கம்பஹா மகாநகர சபை, கம்பஹா என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் செய்யலாம்.

2023.11.07 ஆம் திகதி அன்று பிற்பகல் 02.00 மணிக்கு சீல் வைக்கப்பட்ட விலைமனு விண்ணப்ப படிவங்களை ஏற்றுக்கொள்வது முடிவடையும் மற்றும் முடிந்தவுடன் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனு கோருவோர் அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்ட பிரதிநிதி அந்த நேரத்தில் பங்குபற்ற முடியும்.

தெரிவுச் செய்யப்பட்ட விலைமனுகாரர்களின் விலைமனு ஏற்றுக்கொள்ளப்பட்டது என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதன் பின்னர் 7 நாட்களுக்குள் 4 மாதங்களுக்கான விலைமனு கூலியுடன் அதற்கான முத்திரை வரியுடன் கூடிய அனைத்துடன் கூடிய வைப்பீட்டு பணத்தையும் ஒரே தடவையில் செலுத்தி ஒப்பந்தம் செய்யப்படவேண்டும். 04 மாதங்களுக்கான வைப்பீட்டு பணத்தை ஒரே தடவையில் செலுத்தமுடியாமல் போகும் விலைமனு கோருவோருக்கு விலைமனு வழங்கப்படமாட்டாது. மேலதிக விவரங்களை 033 – 4942296 அல்லது 033 - 4942297 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளமுடியும்.

| இல | இடம் தொடர்பிலான விவரம் | விலைமனு கோரல் விண்ணப்பக் கட்டணம் | விலைமனு வைப்பீட்டு பணம் ரூபாய் (மீளக் கையளிக்கப்படும்) | வருடாந்திர குறைந்தபட்ச ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| | **இறைச்சிக்கடை** | | | |
| 01 | இல. 07 பொது வர்த்தக நிலைய பன்றி இறைச்சிக் கடை (கம்பஹா) | 1000.00 | 11,000.00 | 550,000.00 |
| 02 | இல. 08 பொது வர்த்தக நிலையம் ஆட்டிறைச்சி கடை (கம்பஹா) | 1000.00 | 2,350.00 | 117,000.00 |
| | **வாராந்த சந்தை** | | | |
| 03 | யக்கல வாராந்த சந்தை | 1,000.00 | 84,010.00 | 4,200,500.00 |
| | **பொது மலசலகூடம** | | | |
| 04 | ஒருத்தொட்ட வீதி பேருந்து நிலையத்துக்கு அண்மையிலுள்ள மலசலக்கூடம | 1,000.00 | 34,000.00 | 1,700,000.00 |
| 05 | ஜா-ஹெல வீதி பேருந்து நிலையத்துக்கு அண்மையிலுள்ள மலசலக்கூடம் | 1,000.00 | 6,020.00 | 301,000.00 |
| 06 | வைத்தியசாலைக்கு அருகிலுள்ள மலசலக்கூடம் | 1,000.00 | 3,000.00 | 150,000.00 |
| | **வாகனங்கள் நிறுத்தும் இடம்** | | | |
| 07 | ஜா-எல, கம்பஹா பேருந்து நிலைய வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 6,020.00 | 301,000.00 |
| 08 | கம்பஹா - கொழும்பு பேருந்து நிலைய வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 10,000.00 | 500,000.00 |
| 09 | கம்பஹா - நிட்டம்புவ பேருந்து நிலையம் வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 6,250.00 | 312,500.00 |
| 10 | ஜா-ஹெல பழைய பேருந்து நிலைய வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 6,000.00 | 300,000.00 |
| | **பூக்கடைகள் பகுதி** | | | |
| 11 | மத்திய பஸ் நிறுத்துமிட அலங்கார பூக்கள் பகுதி | 1,000.00 | 4,200.00 | 210,000.00 |

நீங்கள் சமர்ப்பிக்கும் டெண்டர் தொகையானது முத்திரைக் கட்டணம் மற்றும் தண்ணீர் / மின்சாரத்திற்கான முழுக் கட்டணங்களும் வசூலிக்கப்படும்.

2023.10.23

**லோச்சனா பாலசூரியா**
**நகராட்சி ஆணையர் மற்றும் அதிகாரங்கள்,**
**செயல்பாடுகள்,**
**நிர்வாக அதிகாரி,**
**மாநகர சபை,**
**கம்பஹா**

# ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கும் வழிகளை திறப்பதே சிறந்தது

நாடு பொருளாதார ரீதியில் பள்ளத்தில் விழுந்து கிடந்தபோது, பொழுது ஏன்? விடிகிறது என்று எண்ணும் காலமிருந்ததுடன், அந்த ஒவ்வொரு பொழுதும் விடியும் போதும் ஏதோவொரு பொருளின் விலை அதிகரித்துக்கொண்டே இருக்கும். அதற்குப் பின்னர், ஏனைய பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும்.

ஆனால், அத்தியாவசிய பொருட்களின் விலைகளை அதிகரிப்பதையும், ஏனைய சேவைகளுக்கான கட்டணங்களை அதிகரிப்பையும் அரசாங்கம் கைவிடவில்லை.

இதனால், சாமான்ய மக்கள் பல்வேறான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

குறிப்பாகச் சொல்லப்போனால், அடுத்து என்ன? செய்வதென, சதாகாலமும் யோசித்துக்கொண்டே விழுப்பிதுங்கி நிற்கின்றனர். அன்றாடம் சம்பளம் வாங்குவோர், கிடைக்கும் பணத்தில் வயிற்றை, அரைகுறையாக நிரப்பிக்கொள்கின்றனர். குறைந்தளவில் மாத சம்பளத்தை வாங்குவோர், சம்பளத்துக்கு மறுநாளே கடனாளியாகவிடுகின்றனர்.

எனினும், இந்த விலையேற்றம் இதனுடன் நின்றுவிடாது. இன்னுமின்னும் அதிகரித்துக்கொண்டே செல்லும் என்பதற்கான முன்கூட்டிய அறிவிப்புகள் வெளியாகிக்கொண்டே இருக்கின்றன. மின்சாரக் கட்டண அதிகரிப்பு வெளியான மறு நிமிடமே அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட உணவுப் பண்டங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே பேக்கரி பொருட்களின் விலைகளில் எவ்விதமான மாற்றமும் செய்யமாட்டோம். எனினும், மீண்டும் விலை அதிகரிப்பு ஏற்படுமாயின் தாங்களும் அதிகரிப்போம் என பேக்கரி உற்பத்தியாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனிடையே, நவம்பர் 5ஆம் திகதி முதல் சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படுமென யூகம் வெளியிடப்பட்டுள்ளது.

அப்படியாயின், பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமே இல்லை. இதேவேளை, 2024 பெப்ரவரி மாதம் முதல் எரிபொருள் விலை சூத்திரம் தினசரி அறிமுகப்படுத்தவுள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அப்படியாயின் எந்தவொரு பொருளுக்கும் நிரந்த விலை இருக்காது. விலைகள் மிதந்துக்கொண்டுதான் இருக்கும்.

நிலைமை இவ்வாறு போகுமாயின், மக்கள் பெரும் துன்பப்படுவார்கள் ஆட்சியாளர்கள் மீது கோபம் ஏற்படும். வெறுப்புகளுக்கு முகங்கொடுக்கவேண்டி நிலைமையும் வாக்குகளை இழக்க வேண்டிய நிலைமையும் ஏற்படும் என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட நிறுவனங்கள் கடன் கொடுக்கின்றன. தாங்கள் வழங்கிய கடன்தொகையை மீள வசூலிப்பதில் சில நாடுகள் கால அவகாசம் வழங்கியுள்ளன. வட்டி வீதங்களையும் குறைத்துள்ளன.

ஆனால், நாட்டுக்கு ஏற்றுமதி வருமானம் கிடைப்பது குறைந்துள்ளது.

எனினும், நமது நாட்டில் பயிடப்பட்டு ஏற்றுமதி செய்யக்கூடிய சாதாரண மரக்கறிகளையும் இறக்குமதிச் செய்வதற்கு இறக்குமதிச் சட்டத்தில் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது நாட்டுக்குள் பாரிய தாக்கத்தை செலுத்தும். நாட்டுக்குள் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய உற்பத்தி வருமானத்தை அதிகரிக்கும் வகையிலான திட்டங்களை இனியாவது செயற்படுத்த வேண்டும்.

இறக்குமதியிலேயே தங்கியிருந்தால், மீண்டும் டொலருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, பெற்ற கடனையும் செலுத்த முடியாது. பொருளாதார ரீதியில் அதளபாதாளதுக்குள்ளே நாடு விழுந்துவிடும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


## வாழ்வியல் தரிசனம்



நீங்கள் ஒருவரை அல்லது பலரை மட்டும் உங்கள் வசப்படுத்த வேண்டுமா? அதற்கு எதையும் எதிர்பாராத அன்பு நிலைக்குள் பிரவேசித்திடுக!

அதனால் முழு உலகமும் உங்கள் நட்பைத் தேடும். அன்பு என்பது ஓர் இனிய காந்தம் போன்றது. இதற்குள் சுயநலன் இல்லை. பொது நலன் மட்டுமே அன்பின் சுயபண்பாகும். தனக்குத்தான் என எந்தத் தேவைகளும் அன்புடைய மாந்தர்களுக்கு இல்லை.

உலகை நோக்காமல், தன்னை மட்டும் நோக்குதல் குறுகிய மனப்பான்மையாகும். எல்லோராலும் இயன்றவரையில், பிறருக்கு உதவி செய்திட முடியும்.

பேச்சில் கனிவு வேண்டும். துயரப்படுவோருக்கு தேற்றுதல் அவசியமானது. வசதிகள் அற்றவர்கள், தங்கள் இதயப் பரிமாற்றத்தால் வரும் சக்தியால், துன்பப்படும் மனிதர்களைச் சாந்தப்படுத்த முடியும்.

ஆத்ம பலம் வையக்தை ஈர்க்கும் திறன் கொண்டது. எங்கள் அறிவையும் ஆற்றலையும் ஆத்ம பலத்துடன் இணைத்தால், எதையும் எந்தப் பாரிய செயல்களையும் இலகுவாகச் செய்து முடித்துவிடலாம்.

மனத்திண்மையால் எங்களை நாங்களே வசப்படுத்த இயலும். மக்கள் நலனுக்காக அர்ப்பணம் செய்வீர்களாக! அதுவே அன்பு சுரக்கும் வாழ்க்கையாகும்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### குறுகிய காலத்தில் அழிவு

ஹட்டன் பஸ் நிலைய மைதானம் புனரமைக்கப்பட்டுள்ள போதிலும், உரிய முறையில் சமப்படுத்தப்படாமையால், பஸ் நிலையம் மிகக் குறுகிய காலத்தில் அழிந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமைகள் தொடர்பில் அப்பகுதி மக்கள் பலர் கருத்து தெரிவிக்கையில், இந்த பஸ் நிலையத்தின் காணி 34 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட போதிலும் நிலம் சரிவர சமப்படுத்தப்படாமையால், சில இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளது.

இந்த நிலைமைகளினால் பஸ் நிலையத்தின் காணி குறுகிய காலத்தில் அழிந்து போகும் அபாயம் காணப்படுவதாகவும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் அவதானம் செலுத்த வேண்டுமெனவும் மக்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்த நிலைமைகள் குறித்து ஹட்டன் - டிக்கோயா மாநகர சபையின் செயலாளர் பண்டாரவிடம் வினவியபோது, இந்த பஸ் நிலையத்தின் தரைதளத்தில் உள்ள பெரிய பள்ளங்களை மூடி சில இடங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதை தற்போது காணக்கூடியதாக உள்ளதாகவும், பஸ் நிலையத்தை முறையாகப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

– சுதத் எச்.எம்.ஹேவா



# அதிகாரத்தின் பலப்பரீட்சை

**லக்ஸ்மன்**

இஸ்ரேல் - பலஸ்தீன யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற கோரிக்கை உலகளவில் வலுத்துவரும் நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை இலங்கையின் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட போர் செய்து கொண்டிருக்கும் அந்த இரு நாடுகளிடமும் உலக நாடுகளிடமும் யுத்தத்தினை நிறுத்தும்படியான கோரிக்கை முன்வைக்கும் முகமான விசேட ஒத்திவைப்புப் பிரேரணை கேள்விக்குட்படுத்தப்பட்டது. பாராளுமன்றத்துக்கு வெளியே இப்போதும் கேள்விக்குட்படுத்தப்பட்டு வருகிறது. சொந்த நாட்டு மக்கள் மீதே யுத்தம் தொடுத்து இன அழிப்பைச் செய்த இலங்கைக்கு இதற்கு அருகதை இருக்கிறதா என்பதே அக்கேள்வியாகும்.

அதிகாரத்துவத்துக்கானதாக, மத்திய கிழக்கிலே இஸ்ரேல் - பாலஸ்தீனத்துக்கிடையில் கடந்த ஒரு வாரத்தித்திற்கும் மேலாகக் கடுமையான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த யுத்தமானது இரு நாடுகளுக்கிடையில் நடைபெற்று வருகிறது. ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகிக்கொண்டிருக்கின்றன என்பது நோக்கப்படவேண்டியது.

மட்டக்களப்பில் ஊடக சந்திப்பொன்றை கடந்த வாரத்தில் நடத்திய பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் 2009இல் முள்ளிவாய்க்காலில் சொந்த நாட்டு மக்களையே கொத்துக் குண்டுகள், பொஸ்பரஸ் குண்டுகள், வான்வழித் தாக்குதல்கள் மூலம் பலியெடுத்த இலங்கை அரசு இஸ்ரேல்-பாலத்தீனம் ஆகிய இரண்டு நாடுகள் போர் புரிகையில் மக்களின் உயிர்கள் மீது அக்கறை கொள்வதற்கு அருகதையற்றது. தார்ப்பரியம் மற்றும் யோக்கியதைகளுக்குத் தகுதியற்றது. அன்று முள்ளிவாய்க்காலில் நடைபெறாத விடயமா இன்று மத்திய கிழக்கிலே நடைபெறுகின்றது எனக் கேள்வியெழுப்பியிருந்தார்.

இது இவ்வாறிருக்க, இலங்கை மீதான குற்றச்சாட்டுக்களை சனல் 4 ஆராயப்படுவதற்காக விவாதங்கள் நடைபெறுகின்றன. எதிர்க்கட்சி தன் பங்கிற்கு அனைத்து விடயங்களிலும் குற்றச்சாட்டுக்களைக் குவித்துக் கொண்டிருக்கிறது.

அவர்களுடைய குற்றச்சாட்டுக்களில் முக்கியமாக தேர்தல் போட்டியின் மூலம் அல்லாமல் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றதையடுத்து பாராளுமன்றத்தின் மூலமாகப் பதவிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது ஆட்சிக்காலத்தினை தேர்தல் மூலமாக அல்லாமல், பாராளுமன்றத்தின் மூலம் தேர்தல் முறை மாற்றம் ஊடாக நீட்டித்துக் கொள்ள முயல்கிறார். சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மகாநாட்டில் பேசிய ஜனாதிபதி, அடுத்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும், அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தல், சாத்தியப்படுமானால் 2025ஆம் ஆண்டின் முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று தெரிவித்திருக்கிறார். அந்த வகையில், எதிர்க்கட்சியின் தேர்தல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் வலுவற்றதாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஜனாதிபதி குறிப்பிட்டபடி தேர்தல்கள் நடைபெறுமா என்பது கேள்விக்கானதே.

கடந்த 14 வருடங்களுக்கு முன்னர் 2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி விடுதலைப் புலிகளுடனான யுத்தம் மௌனிக்கப்பட்டாலும் இன்னமும் இனப் பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசாங்கம் முன்வைக்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபையிலும், அதன் மனித உரிமைப் பேரவையிலும் கொண்டுவரப்படும் பிரேரணைகள் இலங்கை அரசாங்கத்தால் மறுதலிக்கப்படுவதும் அனுசரணை வழங்கிவிட்டு அதிலிருந்து வெளியேறுவதும் நடைபெறுகின்றன. தமிழர் தரப்பு அரசியல்வாதிகள் நாட்டுக்கு விஜயம் செய்கின்ற வெளிநாட்டுத் தலைவர்களிடம், நாட்டிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களிடமும் முன்வைப்புக்களையும் விளக்கங்களையும் கொடுத்துக் கொண்டிருந்தாலும், இந்தியாவின் 13ஆவது திருதத்தினை முழுமையாக அமுல்படுத்துதல் தொடர்பில் கொடுக்கப்படும் அழுத்தங்கள் கணக்கிலெடுக்கப்படவுமில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இஸ்ரேல் - பலஸ்தீன போர் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென வலியுறுத்தி நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாகத்தில் பேசுகையில், வன்னியில் நடைபெற்ற போருடன் பலஸ்த்தீனத்தின் காசாவில் நடைபெற்றுவரும் போரை ஒப்பிடுவது தவறு. ஹமாஸ் அமைப்பை எதிர்க்கும் அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கை போரில் புலிகள் பக்கமே நின்றன. ஐ.நா.வில் அந்த யோசனை ஏற்கப்படவில்லை. இஸ்ரேல் பக்கம் நிற்கும் மேற்குலகமே இலங்கை மீது போர்க்குற்றங்களை சுமத்திவருகின்றன என்று கூறியிருக்கிறார்.

தமிழர்கள் ஒற்றை ஆட்சியை எதிர்த்து வருகின்ற நிலையில், இலங்கை 2,500 ஆண்டுகளாக ஒற்றாட்சி நாடாகவே இருந்து வருகின்றது. இதற்காக எமது மூதாதையர்கள் உயிர்த் தியாகம் கூடச் செய்துள்ளனர். எமது நாட்டை இரண்டாக்குவதற்காகவே புலிகள் போரிட்டனர். அந்த போரை நாம் முடிவுக்குக் கொண்டுவந்தோம் என்ற கருத்தையும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வெளியிட்டிருக்கிறார். அவருக்கு இலங்கையின் இராட்சிய, இராசதானி ஆட்சிமுறைகள் பற்றித் தெரியாமலிருக்க வாய்ப்பிருக்கிறது என்று பதில் கூற முடியும்.

மிகத் தீவிரமான பௌத்த மதவாதத்துடனும். சிங்கள இனவாதத்துடனும் செயற்பட்டு வருகின்ற அடிப்படைவாதிகள் தமிழர்களது பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் வகையிலான முன் முயற்சிகள், குடியேற்ற எண்ணத்துடனான செயற்பாடுகளிலும் வடக்கு கிழக்கில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்குக் கிழக்கின் மட்டக்களப்பு- மயிலத்தமடு, மாதவணை பிரதேசங்களில் வடக்கு, கிழக்கில் யுத்தம் மௌனிக்கப்பட்ட 2009ஆம் ஆண்டு முதல் நடைபெறுகின்ற நெருக்குதல்களை ஒரு நீண்ட கால முயற்சியாகக் குறிப்பிட முடியும்.

மயிலத்தமடு, மாதவணை பிரதேசங்களில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுவருகின்ற பண்ணையாளர்கள் கடந்த 37 நாட்களாக மட்டக்களப்பு- சித்தாண்டியில் சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 8ஆம் திகதி மட்டக்களப்புக்கு வருகைதந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பண்ணையாளர்களைச் சந்தித்ததுடன், அதற்கு சில தினங்களின் பின்னர் அது தொடர்பான கூட்டமொன்றை ஜனாதிபதி செயலகத்தில் நடத்தியிருந்தார். அக் கூட்டத்தில் அம்பாறை, பொலன்னறுவை மாவட்டங்களிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல்தரைப் பிரதேசங்களில் சேனைப் பயிச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு, அவர்களுடைய மாவட்டங்களிலேயே நிலங்களை ஒதுக்க நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்திருந்தார். அனால், அது நடைபெற்ற மறுநாள் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் அனுராதா ஜகம்பத், மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர் அடங்கிய குழுவினர் மதச் சடங்கு சம்பிரதாயங்களுடன் புத்தர் சிலையை குறிப்பிட்ட பிரதேசத்தில் நிறுவி விகாரையை அங்குரார்ப்பணம் செய்திருந்தனர். அச்சிலை மறுநாள் அடையாளம் தெரியாதோரால் அகற்றப்பட்டிருந்ததும் அதன் பின்னர் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் அங்கு சென்று பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினருடன் முரண்பட்டதும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியா மீது குற்றம்சாட்டியதும் வேறு ஒரு கதை.

(மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர் மயிலத்தமடு, மாதவணை மேய்ச்சல்தரையில் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற அத்துமீறல் பிரச்சினைகளில் இதுவரை சம்பந்தப்பட்டதில்லை. ஆனால், தற்போதைய நிலையில் அவர் ஏன் இதற்குள் மூக்கை நுழைக்கிறார் என்று ஆராய்ந்து பார்க்கின்றவேளையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அவருக்கு ஏற்பட்ட அவமானகரமான பிரச்சினைகளை மறைப்பதற்காக இதற்குள் உள் நுழைகிறாரோ என்று சந்தேகிக்கவும் தோன்றுகிறது.)

இச்செயற்பாடானது தம்முடைய மாவட்டங்களில் தேவைக்கு அதிகமாக நிலம் இருக்கின்ற நிலையில், ஏன் தமிழர்களது பகுதிகளுக்குள் சிங்களவர்கள் அத்துமீறி அடாவடிகளைச் செய்ய முயற்சிக்கிறார்கள் என்பதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும். தொடர்ச்சியாகத் தமிழர் தரப்பால் முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் வெறுமனே எதுவும் நடைபெறாமல் வெளிவரவில்லை என்பதற்கு வீணான பிரச்சினைகளைத் தமிழர்கள் உருவாக்க முயலவில்லை என்பதற்கும் கூட இது நல்ல உதாரணமாகும். இது ஜனாதிபதிக்கும் அவருடைய வாக்குறுதிக்கும் இருக்கின்ற அதிகாரத்தினைக் கேள்விக்குட்படுத்தியிருக்கிறது. அத்துடன் கடந்த காலங்களிலும் ஆட்சியிலிருந்த தலைவர்களது வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றமைக்கும் இதனைச் சுட்டிக்காட்டமுடியும்.

அந்த வகையில் தமிழர்கள் இலங்கை நாட்டில் இல்லாத ஒன்றையோ சிங்கள மக்களுடைய உரிமைகளையோ, அதிகாரங்களையோ கேட்டு நிற்கவில்லை. தமிழர்களுடைய விடுதலைப் போராட்டமானது இனப்பிரச்சினைக்கான தீர்வுக் கோரிக்கை தோற்றம் பெற்றவுடனேயே உருவெடுத்ததுபோன்று தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தினை ஆரம்பம் முதலே கையிலெடுத்துக் கொண்டதாகவும் காண்பிக்கவே பெரும்பான்மை அடிப்படைவாதிகள் முயற்சித்துவருகின்றனர்.

இருக்கின்ற ஒன்றை இல்லையென்று சொல்வதும் இல்லாத ஒன்றை இருப்பதாகக் காண்பிக்க முயல்வதும் ஏன் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும் அதிகாரத்துவத்தின் அடிப்படைத்தன்மை அதுவே. ஆனாலும் அதிகாரம் என்பது பங்குபற்றலும், பங்கிடுதலும் எனப் பல விடயங்களை உள்ளடக்கியது என்பதனை எல்லோரும் மறந்து விடுகின்றனர் என்பதே கவலைக்குரியது.



# 8ஆவது கண்காட்சிக்கு அனுசரணை வழங்கும் SAIL LANKA CHARTER

கொழும்பு- இலங்கை, இலங்கையில் கடல்சார் சுற்றுலாத்துறையினை மேம்படுத்துவதற்கான நோக்கோடு Sail Lanka Charter ஆனது கப்பல் மற்றும் கடல்சார் துறை தொடர்பாக தனது 8ஆவது கண்காட்சியினை நடத்த அனுசரணை வழங்குகிறது.

Chamber of Marine Industries Sri Lanka (CMISL) வின் ஏற்பாட்டில் இந்நிகழ்வானது 2023 ஒக்டோபர் 27 முதல் 29 வரை கொழும்பு துறைமுக நகரத்தில் இடம்பெறவிருக்கின்றது. Sail Lanka Charter ஆனது கடல்சார் தொழில்துறையை முன்னேற்றுவிப்பதற்கும் பிராந்தியத்தினுள் சுற்றுலா தொடர்பான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் வளர்ப்பதற்குமன அதன் அர்ப்பணிப்பினை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

இக்கண்காட்சியானது இலங்கையின் கடல்சார் ஆற்றலினை பறைசாற்றும் வகையிலான நிகழ்வாகும். அதாவது சர்வதேச ரீதியில் பங்காளித்துவத்தினை ஊக்குவித்து வளர்ப்பதற்கும், அதோடு கூட இலங்கையின் கடல்சார் துறையில் முதலீடுகளினை மேற்கொள்வதன் நன்மைகளை முன்னிலைப்படுத்துதலும் ஆகும். மேலும் இந்நிகழ்வானது சர்வதேச பங்குதாரர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கு இத்தொழில்துறையின் மீதான குறிப்பிடத்தக்க முன்னேற்றம் மற்றும் திறனை நேரடியாகக்காண ஒரு அரிய வாய்ப்பினையும் வழங்குகின்றது.

Sail Lanka Charter இன் நிர்வாக இயக்குநரான Mario Stubbs அவர்கள் இலங்கையின் கடல்சார் தொழில்துறையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் படகுக் கண்காட்சியின் முக்கிய பங்கு தொடர்பாக வலியுறுத்திக் காட்டினார். “எமது வரவிருக்கும் 8வது இந்நிகழ்வானது அக்டோபர் 27-29, 2023 இல் நடாத்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இது எமது நாட்டின் கடல் துறையில் இருக்கக்கூடிய புதுமை, கைவினைத்திறன் மற்றும் எல்லையற்ற ஆற்றலினைப் பறைசாற்றும் வகையிலான ஓர் வித்தியாசமான காட்சியாக இருக்கப்போவது என்பது உறுதி என குறிப்பிட்டார். இந்நிகழ்வானது வெறுமனே ஓர் கண்காட்சி மட்டும் அல்லாது, இது தொழில்துறை சார்ந்த வீரர்கள், கண்டுபிடிப்பாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் யாவரும் ஒன்றிணைந்து நாம் மேற்கொண்ட வியக்கவைக்கும் முன்னேற்றம் மற்றும் மதிப்பிட முடியாத வாய்ப்புகளினை நேரில் கண்டு மகிழப்போவது என்பது உறுதி. இது நமது கடல்சார் சமூகத்தின் அர்ப்பணிப்பு மற்றும் தொலைநோக்கு பார்வைக்கும் ஒரு மிகச்சிறந்த சான்றாகும்.

இந்த ஆண்டு நாம் ஓர் இணையற்ற எல்லைகளினை நோக்கிய பயணத்தினை மேற்கொள்கின்றோம். எமது விஞ்சிய ஏற்றுமதி வருவாய் தொடர்பான புள்ளிவிவரங்கள் என்பன எமது இத்தொழில்துறையின் மேல்நோக்கிச் செல்லும் வளர்ச்சிப் போக்கினைப் பிரதிபலிக்கின்றது. இக்கண்காட்சியானது எமது வெற்றியினைக் கொண்டாட மிகச்சிறந்த பின்னணியாகத் திகழ்கின்றது. இவை கணினி தொடர்பான வலை அமைப்பு, அறிவு தொடர்பான பகிர்வு மற்றும் கூட்டாண்மைகளை உருவாக்கிக் கொள்வதற்கான ஒரு தளமாகவும் அமையப் போகின்றது.

இது எமது தொழில்துறையினை இன்னும் பாரிய அளவில் அடுத்த கட்டதிற்கு நிச்சயம் எடுத்துச் செல்லும் என்பது உறுதி. எமது கப்பல் மற்றும் கடல்சார் தொழில்துறையின் தரம் மற்றும் கைவினைத்திறனைக் காட்சிப்படுத்துவது முதல் சர்வதேச ஒத்துழைப்புகளை வளர்ப்பது மற்றும் பொறுப்பான படகு சவாரி செய்வதற்கான எமது உறுதிப்பாட்டை எடுத்துரைப்பது வரை, இக்கண்காட்சியானது நம்பிக்கை மற்றும் உத்வேகத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழப்போகின்றது.

இந்த ஒக்டோபர் மாதத்தில் கொழும்பு துறைமுக நகரத்தில் எம்மோடு இணைந்து இலங்கையின் கடல்சார் தொழில்துறையின் எதிர்காலம் தொடர்பான வெளிப்பாடுகளினைக் கண்டுகளிக்க உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்”

**Sail Lanka Charter ஆனது கடல்சார் தொழில்துறையை முன்னேற்றுவிப்பதற்கும் பிராந்தியத்தினுள் சுற்றுலா தொடர்பான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் வளர்ப்பதற்குமன அதன் அர்ப்பணிப்பினை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது**

**கொழும்பு துறைமுக நகரத்தில் எம்மோடு இணைந்து இலங்கையின் கடல்சார் தொழில்துறையின் எதிர்காலம் தொடர்பான வெளிப்பாடுகளினைக் கண்டுகளிக்க உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்**

**இடம்பெறவிருக்கும் இக்கடல்சார் தொழில்துறை தொடர்பான கண்காட்சியானது மென்மேலும் இத்துறையின் வளர்ச்சிக்கு வினையாக்கியாக திகழப்போகின்றது என்பது திண்ணம்**

கடல்சார் தொழில்துறை தொடர்பான கண்காட்சி என்பது சாதனைகளைக் கொண்டாடுவது மட்டுமல்ல, இலங்கையின் வளர்ந்து வரும் இத்தொழில்துறையின் பிரகாசமான எதிர்காலத்திற்கான ஒரு முக்கிய நுழைவாயிலாகவும் அமைகின்றது. மேலும் இது இத்தொழில்துறையில் இத்தனை காலமும் கடந்து வந்த குறிப்பிடத்தக்க பயணத்தினையும், இவை அனைத்தும் எதிர்கால நம்பிக்கைக்குரிய வாய்ப்புகள் நிச்சயம் நிறைவேறும் என்பதற்கான உறுதிப்பாட்டினையும் வழங்குகின்றது. அதோடு தேசிய மற்றும் சர்வதேச அளவிலும் கூட அதன் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகின்றது.

2022ஆம் வருடத்தில், கடல்சார் துறையின் ஏற்றுமதி வருமானமானது ஏறாததாள சுமார் USD 17 மில்லியன் ஆக அமைந்திருந்தது.

மேலும் நிகழும் வருடத்தில் இவ்வருமானமானது இரட்டிப்பாகும் என்பதற்கான உறுதியான அறிகுறிகள் தென்படுகின்றன. இவ்வலுவான வளர்ச்சிப் போக்கானது கடல்சார் தொழில்துறையின் எதிர்காலம் சுபீட்சமானதாக அமையும் என்பதனை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது. இதன் நிமித்தம் கடல்சார் தொழில்துறை தொடர்பான கண்காட்சியானது இத்தொழில்துறையின் முக்கியத்துவத்தினையும் வளர்ச்சியினையும் அடுத்த கடத்திற்கே கொண்டு செல்லப்போகின்றது.

இடம்பெறவிருக்கும் இக்கடல்சார் தொழில்துறை தொடர்பான கண்காட்சியானது மென்மேலும் இத்துறையின் வளர்ச்சிக்கு வினையாக்கியாக திகழப்போகின்றது என்பது திண்ணம். இது இக்கடல்சார் தொழில்துறையின் சர்வதேச அங்கீகாரத்தினைப் பறைசாற்றுவது மட்டுமின்றி இத்துறையில் இலங்கையின் தலைமைத்துவத்தினை உறுதிப்படுத்துகின்றது.

இந்நிகழ்வு தொடர்பாக, Sail Lanka Charter, Morex Lanka (Pvt) Ltd என்பன பிளாட்டினம் அனுசரணையாளர்களாகவும், Neil Marine (Pvt) Ltd ஆனது டைமண்ட் அனுசரணையாளராகவும் தமது பங்களிப்பினை வழங்கப்போகின்றன. மேலும் இத்தொழில்துறையின் ஒற்றுமை மற்றும் வளர்ச்சிக்காகப் பகிரப்பட்ட அர்ப்பணிப்பையும் அனைவருக்கும் இந்நிகழ்வானது பறைசாற்றப்போகின்றது.

# ஹெவ்லொக் சிட்டி மோல் அங்குரார்ப்பணம்




ஹெவ்லொக் சிட்டி மோல் 2023 கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது. சர்வதேச தரத்திலமைந்த இந்த ஷொப்பிங் கட்டடத்தொகுதி நிகரற்ற ஷொப்பிங் மற்றும் பொழுதுபோக்கு அனுபவத்தை வழங்கி, கொழும்பின் முக்கிய இடத்தில் மக்களுக்கு மிகப்பொருத்தமான ஒரு இடத்தை உருவாக்கியுள்ளது.

200,000 சதுர அடிக்கு மேல் பரந்து காணப்படும் ஹெவ்லொக் சிட்டி மோலில் ODEL, காகில்ஸ் ஃபுட் ஹோல், ஸ்கோப் சினிமாஸ், ஃபுட் ஸ்டுடியோ, கூல் பிளானட் மற்றும் அபான்ஸ் உள்ளிட்ட ஆறு முதன்மை விற்பனையகங்கள் உள்ளன. மேலும், 132 ஏனைய விற்பனை நிலையங்களும் இருப்பதோடு, அவை இணையற்ற ஃபேஷன் மற்றும் அணிகலன் தெரிவுகள், பொழுதுபோக்கு அம்சங்கள், மதிமயக்கும் உணவு மற்றும் பானங்கள், வசதி சேவைகள், எலக்ட்ரானிக்ஸ், வீட்டு உபகரணங்கள், மற்றும் பரிசுகள் மற்றும் புதுமையான அம்சங்களைப் பெற்றுத் தருகின்றன.

உணவுப் பிரியர்களைப் பொறுத்தவரை ஹெவ்லொக் சிட்டி மோல் வழங்கும் தெரிவுகளை ஒரு சமையற்கலை சாகசப் பயணம் என்று சொல்லலாம். 30க்கு மேற்பட்ட விசேட உணவகங்கள், துரித சேவை இடங்கள், கஃபே, மற்றும் ஸ்போர்ட்ஸ் பார்கள் இணைந்து வழங்கும் உலகளாவிய உணவு வகைகள் மற்றும் உள்நாட்டு விருப்பத் தெரிவுகள் என அனைத்தும் கிடைக்கும் சிலிர்ப்பூட்டும் food court உடன் உங்களுக்குப் புதியதொரு அனுபவம் கிடைப்பது நிச்சயம்.

ஹெவ்லொக் சிட்டி மோல் தனது வியப்பூட்டும் பொழுதுபோக்கு அம்சங்களையும் வெளிப்படுத்த தயாராக உள்ளது. Wet & Wild Adventure Zone உங்களுக்கு திகிலூட்டி பரவசப்படுத்த இருப்பதோடு, Jungle Zone வழங்கும் சுவரேற்றம் மற்றும் நீர் சாகச விளையாட்டுகள், அத்துடன், Ocean Zone இனது பலதரப்பட்ட நீர் விளையாட்டு செயற்பாடுகள் என உங்கள் வயது எதுவானாலும் உங்களைக் கவர பல அம்சங்கள் இங்கு காத்திருக்கின்றன. கேமிங் ரசிகர்களைப் பரவசப்படுத்த இங்குள்ள முழுக் குடும்பத்துக்கும் ஏற்ற Augmented Reality மற்றும் Virtual Reality கேம்களை விளையாடி மகிழலாம்.

அடுத்த வருட ஆரம்பத்தில் திறக்கப்படவுள்ள ஹெவ்லொக் சிட்டி மோல் இனது 1000 இருக்கைகள் கொண்ட, ஆறு திரை மல்ட்டிபிளக்ஸ் ஆனது இலங்கையின் முதலாவது ஒரேயொரு முதற்தரமான பெரிய அளவு IMAX திரையரங்கம் ஆகும்.

ஓவர்சீஸ் ரியாலிட்டி (சிலோன்) பிஎல்சி இனது குழும நிறைவேற்று அதிகாரி, பணிப்பாளர் பிரவிர் சமரசிங்க குறிப்பிடும்போது ‘நாம் அனைவரையும் ஹெவ்லொக் சிட்டி மோலுக்கு வரவேற்கின்றோம். எம்மை விசேடமானவர்களாக்கிடும் தனித்துவமான பல அம்சங்கள் இந்த மோலில் உண்டு, சிறப்பான உருவாக்கல் கோட்பாடு, மிகப் பொருத்தமான அளவு, மத்திய அமைவிடம், மற்றும் மிகக் கவனமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகநாமங்கள் என்பவற்றை அதில் குறிப்பிடலாம். நாம் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பல்வகையான மற்றும் பரவசமளிக்கும் ஷொப்பிங் இடங்கள், பொழுதுபோக்குத் தெரிவுகள் மற்றும் உணவக அனுபவங்களை வழங்கக் காத்திருக்கின்றோம். ஹெவ்லொக் சிட்டி மோல் முழுக் குடும்பத்தினருக்கும் சேவையளிக்கின்ற, ஒரு மகிழ்விடமாக இருந்து அதியுச்ச நவீன புறநகர் மோல் ஒன்றாக விரைவில் மாறும்’ எனக் குறிப்பிட்டார்.

# MVTMஐ அறிமுகப்படுத்துகிறது MAS Matrix



MAS Matrix, அதன் சமீபத்திய தயாரிப்பு தளமான ‘MVTM’ ஐ அறிமுகப்படுத்துவதாகத் தெரிவித்துள்ளது. flat-knit தயாரிப்புகளுக்கான ஒரு மாற்றத்தில், MVTM எல்லையின் தொழில்நுட்ப மற்றும் தயாரிப்புத் திறன், விளையாட்டு ஆடைகளில் புரட்சியை ஏற்படுத்தத் தயாராக உள்ளது. நவீன, வேகமான வாழ்க்கை முறைக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட இந்தத் தொகுப்பானது, அதிக செயல்பாடு கொண்ட, பல்துறை மற்றும் நாகரீகமான வடிவமைப்புகளை வழங்குகிறது.

MVTM என்பது இயக்கம் (Movement) மற்றும் வேகத்தின் (Momentum) கலவையாகும். இந்தப் பல்துறை ஆடைகள் (Versatile Pieces) ஒரு நாள் அல்லது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தயாரிப்பு வரிசையானது இயக்கச் சுதந்திரத்தை அனுமதிக்கும் அதேவேளையில், வசதியான மற்றும் செயல்பாட்டை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், நவீன வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் MVTM தயாரிப்புகள் வாடிக்கையாளருக்கு வழங்கப்படுகின்றன.

Matrix இன் திறன்கள்குறித்து கருத்து தெரிவித்த MAS Matrix பிரதம நிறைவேற்று அதிகாரி பாலித லியனகே, “Matrixஇல் எங்கள் பயணம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாங்கள் காலணிகளுக்கான பின்னப்பட்ட ஷூ கவர்களை (Knitted Uppers) உருவாக்குவதுடன் பின்னல் ஆடைகள் மற்றும் பிற மேம்பட்ட தொழில்நுட்பங்களிலும் முன்னெற்றம் அடைந்துள்ளது. இன்று MVTM அறிமுகம்மூலம் எங்களின் முழு திறன்களையும் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். செயல்பாட்டு மற்றும் நிலையான நாகரீக அலங்கார வடிவமைப்புகளுடன் புத்தாக்கமான ஆடைகளைச் சந்தைக்குக் கொண்டுவருவதே எங்கள் நோக்கம்.” எனத் தெரிவித்தார்.

MAS Holdings இன் விரிவான நிலைத்தன்மை நடவடிக்கை, MAS Plan for Change உடன் இணைந்து, MAS Matrix தனது எதிர்கால வாடிக்கையாளர்களுக்கு மேலும் நிலையான மாற்றுகளை வழங்க உறுதிபூண்டுள்ளது. பொறியியல் நெசவின் ஒரு தனித்துவமான அம்சம் ‘knit to shape’ செய்யும் திறனாகும், இது traditional cut மற்றும் தையல் செயல்பாடுகளுடன் ஒப்பிடும்போது பாவனையாளர் முந்தைய கழிவுகளை 18-22%ஆக குறைக்கிறது. மேலும், MVTM தொகுப்பு நிலையான, இயற்கை மற்றும் மீளுருவாக்கக்கூடிய மூலங்களிலிருந்து பெறப்பட்ட மூலப் பொருட்களின் 77% பயன்பாட்டைக் கொண்டுள்ளது. இவற்றில் மீள்சுழற்சி செய்யப்பட்ட பொலியஸ்டர், organic, Better Cotton Initiative-certified cotton Fabrics வகைகள் மற்றும் Modal, Tencel, மற்றும் Hemp போன்ற உயிரியல் அடிப்படையிலான துணிகள் ஆகியவை அடங்கும்.

MVTM தொகுப்பில் 77% மீள்சுழற்சி செய்யப்பட்ட பாவனையாளர்களால் வீசப்படும் கழிவுகள் அல்லது இயற்கை மற்றும் மீளுருவாக்கக்கூடிய நூல்களால் ஆனது, இது நிலையான எதிர்காலத்திற்கான உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

MAS Matrix, MAS Holdings நிறுவனத்தின் மிகப்பெரிய முதலீடாகும், இது 1000 Stoll Flatbed இயந்திரங்களைக் கொண்டுள்ளது, இது Nike, Decathlon, Gymshark, Lacoste, Victoria’s Secret மற்றும் Stoko போன்ற உலகளாவிய வர்த்தக நாமங்களுக்கான Athleisure ஆடைகள், செயல்திறன் ஆடைகள், அத்தியாவசியங்கள் மற்றும் நெசவு கூறுகளை உள்ளடக்கிய தயாரிப்பு வகைகளை வழங்குகிறது. MVTM இன் அறிமுகம், MAS Matrix இன் கண்டுபிடிப்பு, நிலைத்தன்மை மற்றும் நுகர்வோருக்கு அவர்களின் இயக்கமயமான வாழ்க்கை முறைகளுக்குத் தடையின்றி மாற்றியமைக்கக்கூடிய ஆடைகளை வழங்குவதற்கான உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாகும். அதன் தனித்துவமான பாணி, செயல்பாடு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஆகியவற்றைக் கொண்டு, MVTM Athleisure உலகில் அலைகளை உருவாக்கத் தயாராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

குஜராத்

# கர்பா நடனமாடிய 10 பேர் பலி



குஜராத்தில் நவராத்திரியின் 9 நாட்களும் அம்மாநில நாட்டுப்புற நடனமான கர்பா நடனமாடி மக்கள் கொண்டாடுவது வழக்கம். இதற்காக பொது இடங்களில் கர்பா பாடல், நடனங்கள் நடத்தப்படும். இந்நிலையில், மாநிலம் முழுவதும் கர்பா நடனமாடிய 10 பேர் மாரடைப்பால் இறந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

அகமதாபாத்தில் வெள்ளிக்கிழமை (20) 24 வயது இளைஞரும், கபட்வன்ச் பகுதியில் 17 வயது சிறுவனும் கர்பா நடனத்தின்போது மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளனர். இதை விட அதிர்ச்சிகரமாக வதோதராவின் தபோய் பகுதியில் 13 வயது சிறுவன் மாரடைப்பால் இறந்துள்ளான். நவராத்திரியின் முதல் 6 நாட்களில் 108 ஆம்பியூலன்ஸ் சேவைக்கு இதய பாதிப்பு தொடர்பாக 521 அழைப்புகள் வந்துள்ளன. மூச்சுத் திணறல் தொடர்பாக 609 அழைப்புகள் வந்துள்ளன.

இவை அனைத்து மாலை 6 மணி முதல் அதிகாலை 2 மணி வரையில் வந்துள்ளன.

இந்த நேரத்தில் தான் கர்பா நடன நிகழ்ச்சிகள் நடத்தப்படுவது வழக்கம், கர்பா நடன நிகழ்ச்சி நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

குஜராத்

## 'ககன்யான்' முதற்கட்ட சோதனை வெற்றி



அமெரிக்கா, ரஷ்யா, சீனா நாடுகளைத் தொடர்ந்து இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் விண்ணுக்கு மனிதனை அனுப்பும் முயற்சியில் தீவிரம் காட்டி வரும் நிலையில், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள முதல் ஏவுதளத்தில், மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தின் முதற்கட்ட சோதனை இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, கன்யான் திட்டத்தின் மாதிரி விண்கலம் டிவி-டி1 றொக்கெட் மூலம், தரையில் இருந்து 16.6 கி.மீ. தூரம் வரை அனுப்பி, மீண்டும் அதை பாராசூட் மூலம் வங்கக்கடலில் இறக்கப்பட்டுள்ளது. இந்த சோதனை வெறும் 20 நிமிடத்தில் நிறைவு பெற்றுள்ளது. இந்நிலையில், ககன்யான் மாதிரி விண்கலம் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதாக இஸ்ரோ தலைவர் சோம்நாத் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

புதுடெல்லி

## இந்தியாவின் அன்பு பரிசு

இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்திய ஹமாஸ் குழுவினர், பலரை பிணைக்கைதிகளாக பிடித்துச் சென்றனர். அதற்கு பதிலடியாக காசாவில் இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், உயிர் வாழத் தேவையான அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய விமானத்தை காசாவுக்கு இந்தியா அனுப்பியுள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், காசாவில் தவித்து வரும் பாலஸ்தீனர்களுக்காக உயிர் காக்கும் மருந்துகள், வெட்ட வெளியில் படுக்கும் வகையில் ஸ்லீப்பர் பேக், தார்ப்பாலின், மாத்திரைகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் முதல் கட்டமாக அனுப்பப்பட்டுள்ளன என பதிவிட்டுள்ளார். மேலும், இந்திய மக்களின் அன்புப் பரிசு என பதிவிட்டுள்ளார்.



எகிப்து

# திறக்கப்பட்டது ரஃபா எல்லை

ஹமாஸ்க்கு பதிலடி கொடுக்கும் வகையில் காசா மீது தொடர்ந்தும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் எகிப்தில் இருந்து காசாவிற்கு செல்லும் ரஃபா பாதை மூடப்பட்டது.

இதன் காரணமாக பல இலட்சம் மக்கள் மருத்துவ வசதியின்றி தவித்தனர். காசாவின் வடக்குப் பகுதியில் உள்ள மக்களை வெளியேறுமாறு வலியுறுத்திய இஸ்ரேல், தாக்குதலை தொடர்ந்த வண்ணம் இருந்ததால், உதவிப் பொருட்களை கொண்டு செல்ல முடியாத நிலை நீடித்தது.



இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சில தினங்களுக்கு முன் இஸ்ரேல் சென்றிருந்தார். அப்போது இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு உடன் பேச்சுவார்த்தை நடத்தி காசா மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்க அனுமதிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதேபோல், எகிப்து ஜனாதிபதி இதுகுறித்து பேசினார்.

பின்னர், உதவிப் பொருட்களை கொண்டு செல்லும் வகையில் இஸ்ரேல் ரஃபா பாதையை அனுமதிக்கும் எனக் கூறியிருந்தார். ஆனால், ரஃபா பாதையில் உள்ள வீதிகள் சேதமடைந்ததால் எப்போது உதவிப் பொருட்கள் செல்லும் என அறிவிக்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில், தற்போது எகிப்தில் இருந்து காசாவிற்கு உதவிப் பொருட்களுடன் கனரக வாகனங்கள் ரஃபா பாதை வழியாக சென்று காசாவை அடைந்துள்ளன. இதன்மூலம் பரிதவித்து வரும் காசா மக்களுக்கு உதவிப் பொருட்கள் விநியோகிக்கப்பட இருக்கிறது.

பலஸ்தீனம்

## "பலஸ்தீன மக்கள் வெளியேற மாட்டார்கள்"



எவ்வாறான தடைகள் சவால்கள் ஏற்பட்டாலும் பலஸ்தீன மக்கள் தமது சொந்த நிலத்தை விட்டு வெளியேற மாட்டார்கள் என எகிப்தின் கைரோவில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே மூண்டுள்ள மோதல் நிலையைத் தீர்த்து வைக்கும் நோக்கில் குறித்த மாநாடு எகிப்து ஜனாதிபதி அல் சீசியின் தலைமையில் நடைபெற்றுள்ளது.

பப்புவா நியூ கினியா

## கரை ஒதுங்கியது கடற்கன்னியா?



தென்மேற்கு பசிபிக் கடல் பகுதியில் உள்ள நாடு, பப்புவா நியூ கினியா. அந்நாட்டின் பிஸ்மார்க் கடற்கரையோரம் உள்ள சிம்பேரி தீவு பகுதியில் கடற்கன்னியை போன்ற தோற்றமுடைய விசித்திர உயிரினம் ஒன்றின் உடல், கரை ஒதுங்கியுள்ளது. நியூ அயர்லேண்டர்ஸ் ஒன்லீ (NewIrelanders Only) எனும் முகநூல் பக்கத்தில் இது குறித்த தகவல்கள் முதலில் வெளியிடப்பட்டுள்ளது.

இத்தகைய உயிரினங்கள் "கிளாப்ஸ்டர்" (globster) என அழைக்கப்படுவதாக "லைவ் சைன்ஸ்" எனும் அறிவியல் ஆய்வுகள் குறித்த தகவல் வலைத்தளம் தெரிவிக்கிறது. தற்போது கரை ஒதுங்கியிருக்கும் இந்த "கிளாப்ஸ்டர்" உயிரினத்தின் உடல் எடை, நீளம், மற்றும் இவை எவ்வாறு உருவாகின்றன என்பது குறித்த தகவல்களை அறிவது கடினம் என்றும் அந்த வலைத்தளம் தெரிவிக்கிறது.



உலகக் கிண்ணம்:

# இங்கிலாந்தை வீழ்த்திய தென்னாபிரிக்கா

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், மும்பையில் வெள்ளிக்கிழமை (20) நடைபெற்ற நடப்புச் சம்பியன்கள் இங்கிலாந்து உடனான போட்டியில் தென்னாபிரிக்கா வென்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

தென்னாபிரிக்கா: 399/7 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹென்றிச் கிளாசென் 109 (67), றீஸா ஹென்ட்றிக்ஸ் 85 (75), மார்கோ ஜன்சன் ஆ.இ 75 (42), ஏய்டன் மார்க்ரம் 42 (44) ஓட்டங்கள். பந்துவீச்சு: அடில் ரஷீட் 2/61)

இங்கிலாந்து: 170/10 (22 ஓவ. ) (துடுப்பாட்டம்: மார்க் வூட் ஆ.இ 43 (17), குஸ் அட்கின்ஸன் 35 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜெரால்ட் கொயட்ஸி 3/35, லுங்கி என்கிடி 2/26, மார்கோ ஜன்சன் 2/35, ககிஸோ றபாடா 1/38)

போட்டியின் நாயகன்: ஹென்றிச் கிளாசென்

இதேவேளை லக்னோவில் நடைபெற்ற மற்றைய போட்டியில் நெதர்லாந்தை இலங்கை வென்றிருந்தது.

இந்நிலையில் சென்னையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஆப்கானிஸ்தானை பாகிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.

அகில இலங்கை ரீதியிலான பெண்களுக்கான கூடைப்பந்தாட்டம்:

## சம்பியனான யாழ். அணிக்கு பாராட்டு விழா



■ பு. கஜிந்தன்

அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட அணி சம்பியனான நிலையில், இதற்கான பாராட்டு விழா யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

குறித்த நிகழ்வில், இத்தொடரில் பங்குபற்றிய வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டதோடு, அரச அதிபரினால் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## சமநிலையில் றியல் மட்ரிட் - செவிய்யா போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் வெள்ளிக்கிழமை (20) இரவு நடைபெற்ற றியல் மட்ரிட்டுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் செவிய்யா சமப்படுத்தியது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை டனி கர்வகால் பெற்றதோடு, செவிய்யா சார்பாகப் பெறப்பட்ட கோலானது கோல் ஒவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் ஆர்சனல்–செல்சி போட்டி

### எவெர்ற்றனை வென்ற லிவர்பூல்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் வெள்ளிக்கிழமை (20) இரவு நடைபெற்ற ஆர்சனலுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் செல்சி சமப்படுத்தியது.

செல்சி சார்பாக, கோல் பல்மர், மைகலியோ முர்டிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஆர்சனல் சார்பாக, டெக்லன் றைஸ், லியனார்டோ ட்றொஸார்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற எவெர்ற்றனுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் வென்றது. லிவர்பூல் சார்பாகப் பெறப்பட்ட கோல்களை மொஹமட் சாலா பெற்றிருந்தார்.

## சிற்றியிலிருந்து விலகும் கல்வின் பிலிப்ஸ்?





இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்தியகளவீரரான கல்வின் பிலிப்ஸ்ஸை அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் கழகத்தை விட்டு வெளியேற அக்கழகம் அனுமதிக்கும் எனக் கூறப்படுகிறது.

சிற்றியில் இணைந்ததன் பின்னர் 26 வயதான பிலிப்ஸுக்கு விளையாடும் வாய்ப்பு அரிதாகவே இருந்தது.

இதேவேளை, இன்னொரு பிறீமியர் லீக் கழகமான வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மத்தியகளவீரரான லூகாஸ் பக்கெட்டாவைக் கைச்சாத்திட சிற்றி ஆர்வம் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 23 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.